(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்.

உறுப்பினர் திரு இரா. தாமரைக்கனி பேரவைப் பணிகளினின்றும் கூட்டத் தொடர் முடியும் வரை தற்காலிக நீக்கம் செய்யப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓர் அறிவிப்பைச் சொல்கிறேன். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் விடுதியில் நேற்று இரவு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈஸ்வரன், திரு. தாமரைக்கனியால் தாக்கப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்து, காவல் துறைக்கும் அது பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி, திரு. தாமரைக்கனி கைது செய்யப்பட்டிருக்கிறார் என்கின்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. அது பற்றி மேலும் சில விவரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவிக்கக் கேட்டுள்ளார்கள். அவர்கள் அந்த விவரங்களை அவைக்குத் தெரிவிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு 9.45 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதி வரவேற்பு அறையில் சுயேட்சை சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈஸ்வரனைக் கைகளால் தாக்கியதாகவும், மிரட்டியதாகவும் திரு. ஈஸ்வரன் டி-7 கவர்ன்மென்ட் எஸ்டேட் காவல் நிலைய ஆய்வாளரிடம் புகார் கொடுத்தார். இந்தப் புகாரின்மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இத்தகவல் எனக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் திரு. தாமரைக்கனியை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்று ஆணையிட்டேன். அதன்படி இன்று அதிகாலை 4 மணிக்குச் சட்டமன்ற

1993 மார்ச் 31] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

உறுப்பினர் விடுதியின்முன் திரு. தாமரைக்கனி கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இந்த வழக்கு விசாரணையில் உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே காவல் நிலையத்தில் திரு. தாமரைக்கனி, நேற்று இரவு 10.20 மணிக்கு ஒரு புகார் கொடுத்தார். எதிர்க் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். டேனியல்ராஜ், திரு. ப. ரங்கநாதன், திரு. ச. அழகிரி, டாக்டர் அ. செல்லக் குமார் ஆகியோர் பயங்கர ஆயுதங்களுடன் தன்னைத் தாக்க முயற்சித்ததாக அப்புகாரில் குறிப்பிட்டு அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு. தாமரைக் கனி கேட்டுக்கொண்டுள்ளார். இந்தப் புகாரின்மீதும் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணையும் நடைபெற்றது. அந்த விசாரணையில் திரு. தாமரைக்கனி கொடுத்த புகார் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும், அத்தகைய ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. தாமரைக்கனி விஷயத்தைப் பொறுத்த வரையிலும் சட்டமன்றத்திற்குள்ளேயே இந்த மாதிரி 2, 3 தடவை ஆகிவிட்டது. சட்டசபை நடக்கிறபோது சட்டமன்ற வளாகம் உங்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதி. சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலும் இதுபோன்ற அசம்பாவிதம் நடந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு வாரம் நீக்கி வைத்திருக்கிறீர்கள். இந்த ஒழுங்கீனத்தை முற்றிலும் தடுக்கிற விதத்திலே, இந்தக் கூட்டத்தொடர் முழுவதும் அவரை சட்டமன்றத்திலே கலந்து கொள்ளாமல் இருக்கவும், விடுதியிலிருந்து வெளியேற்றவும் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்ததுபோல, இது பற்றித் தெரிவிக்க என்னுடைய அனுமதியை திரு. தமிழரசன் அவர்களும் கோரியிருந்தார்கள். அதைப்போல் இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்களும்—திரு. வி.பி. சந்திரசேகர் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும்—என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொன்ன தகவலைப் பற்றி எழுப்ப

வேண்டுமென்று சொன்னீர்கள். அதை எழுப்பி, முதலமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். (குறுக்கீடு) அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததைச் சொல்ல வேண்டும். திரு. தமிழரசன் அவர்கள் ஏற்கெனவே (குறுக்கீடு) நீங்கள் சொன்னது திரு. ஈஸ்வரன் அவர்கள் தாக்கப்பட்டது பற்றி மட்டும். திரு. திருநாவுக்கரசு தெரிவித்தது போல திரு. தமிழரசன், திரு. வி. பி. சந்திரசேகர் போன்றவர்கள் இந்த உறுப்பினர்மீது இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதுபற்றிய விவரத்தை நான் சொல்ல வந்தேன். அவர்கள் பேசியதற்குப் பிறகு உங்களுக்கு வாய்ப்புத்தருகிறேன். திரு. செ.கு. தமிழரசன்.

முற்பகல் 11–10

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய பரிசீலனைக்கும் இந்த அவையினுடைய பரிசீலனைக்கும் என்னுடைய கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன், கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றைய முன்தினம் இந்த அவையிலே நடக்கக்கூடாத ஒரு அசம்பாவிதம் நடந்தது. தங்களுடைய இருக்கைக்கு முன்னால் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. செல்லக்குமார் அவர்கள் உங்கள் முன்னால் வந்து நின்றுகொண்டு ஏதோ காகிதங்களைக் காட்டி உங்களைச் செயல்படவிடாமல் தடுத்துக்கொண்டு இருந்தார்கள். அந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அந்தப் பகுதிக்கு வந்து அவர்களைத் தாக்க முயற்சித்தார்கள். அதைத் தொடர்ந்து சில காங்கிரஸ் உறுப்பினர்களும் அவரைத் துரத்திக்கொண்டு தாக்குவதற்கு முயற்சித்தார்கள். தாமரைக்கனி உறுப்பினர் செல்லக்குமாரைத் தாக்க முயற்சித்தபோதே நீங்கள் உடனடியாகத் தாமரைக்கனியை வெளியேற்றவேண்டுமென்று உத்தரவிட்டீர்கள். அதைத் தொடர்ந்தும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் உங்களுடைய செயல்களை . . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொல்லட்டும் அவர் அந்தப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை. அவர் வேறு பிரச்சினைக்கு வருகிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) குமாரதாஸ் அவர்கள் உட்காரவேண்டும். திரு. பழனிசாமி அந்தப் பிரச்சினைக்குள்ளே பேசவேண்டாம். (குறுக்கீடு) தாமரைக்கனி நடந்துகொண்ட பிரச்சினைபற்றி அவர் சொல்ல வருகிறார். அப்போது நடந்த சம்பவத்தைத்தான் சொல்கிறார். (குறுக்கீடு) நான் அனுமதித்தேன். தமிழரசன், தாமரைக்கனி நடந்துகொண்ட விபரத்திற்கு மட்டும் வாருங்கள். (குறுக்கீடு) தாமரைக்கனி நடந்துகொண்ட விபரத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) தாமரைக்கனி பற்றிய விவகாரத்தைப்பற்றி அவரைச் சொல்லச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். தமிழரசன் ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது பேசவிடாமல் தடுக்கக்கூடாது. திரு. தமிழரசன்.

1993 மார்ச் 31]

திரு. செ. கு. தமிழரசன் அதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் உங்கள் இருக்கைக்கு முன்னால் நின்றுகொண்டு நம்முடைய மரபுகளுக்கு மாறாக முறைகேடாக நடந்துகொண்டு உங்களுடைய அலுவல்களைச் செய்யவிடாமல், கோஷமிட்டுக்கொண்டு இருந்தார்கள்(. குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காரவேண்டும். அவர் சொல்வதை அனுமதிக்கக்கூடாது என்று நீங்கள் சொன்னால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் இதில் இல்லை. உட்காருங்கள். குமாரதாஸ், குழப்பம் செய்வது போல் நடந்துகொள்ளக்கூடாது. உங்களுக்கு, பிறகு வாய்ப்பு அளிக்கிறேன். உட்காருங்கள். அவர் சொல்ல வருவது வேறு. அந்த நேரத்தில் நடந்த சம்பவத்தைப்பற்றியும், தாமரைக்கனி நடந்து கொண்டதைப் பற்றியும் சொல்ல வருகிறார். உட்கார வேண்டும். (குறுக்கீடு) நேற்றையதினம் அனுமதித்தேன்.

திரு. செ. கு. தமிழரசன் : பிறகு அவை முன்னவர் அவர்கள் தாமரைக்கனியை ஒருவார காலம் சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கவேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தபின், இந்த அவை அதை நிறைவேற்றியது. இருப்பினும் கூட, உங்களுடைய அலுவல்களுக்கு இடையூறு செய்த காங்கிரஸ் உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. ரங்கநாதன் ஆகியோர் இந்த அவை யிலிருந்து வெளியேறவேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். அவர் கள் ஏற்கெனவே இரண்டு முறை இந்த அவையிலிருந்து வெளி யேற்றப் பட்டவர்கள் என்பதால் நீங்கள், இந்தத் தொடர் முழு வதும் அவர்களை நீக்கிவைக்கவேண்டும், நீக்கலாம் என்று நீங்கள் கட்டளை இட்டீர்கள். தாமரைக்கனியைப் பொறுத்த வரையிலும்கூட, இந்த அவையிலிருந்து ஏற்கெனவே இரண்டு முறை நீக்கப்பட்டிருக்கிறார். தொடர்ந்து இத்தகைய சம்பவங் களில் அவர் ஈடுபட்டுக்கொண்டு வருகிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இங்கே குறிப்பிட்டதைப் போல, நேற்று இரவு கூட சட்டமன்ற விடுதி வளாகத்திலே ஒரு அசம் பாவிதச் செயலை அவர் செய்திருக்கிறார். எனவே திரு. தாமரைக்கனி குறித்த உங்கள் முந்தைய தீர்மானத்தை மறு பரிசீலனை செய்து இந்த அவையின் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கிவைக்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே சுட்டிக் காட்டி, இந்தப் பேரவையின் கண்ணியத்தையும், மாண்பையும் மாட்சிமையையும், பேராண்மையையும் காப்பாற்ற நீங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்தியக் குடி யரசுக் கட்சியின் சார்பிலே நான் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1993 மார்ச் 31

படுபவர்கள் தங்களுடைய தொகுதி மக்களுக்குப் பணியாற்றுவதற்காகத்தான் இங்கே வருகை தந்திருக்கிறோம். ஆனால் திருவில்லிப்புத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள், வெற்றிபெற்று இங்கே வந்ததற்குப் பின்னால் சபையின் உள்ளேயும், சபைக்கு வெளியேயும் சட்டமன்ற வளாகத்திற்குட்பட்ட இடங்களிலே இப்படிப்பட்ட தவறான காரியங்களில் ஈடுபட்டு வந்துகொண்டிருக்கிறார்கள். ஆரம்பத்திலே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே இருக்கிற பணியாளர்களை மிரட்டுவதும் அங்கிருக்கின்ற பணியாளர்களை அடிப்பதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்.

முற்பகல் 11–15

அவர்கள் நேற்றையதினம் அங்கே சட்டமன்ற உறுப்பினர்களை மிரட்டுவதும் அடிப்பதுமான சூழ்நிலைக்கு சென்று இருக்கின்றார்கள். நேற்றைக்கு என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினரும் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் வி. கே. சின்னசாமி அவர்களும், திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு பன்னீர்செல்வம் அவர்களும் இப்படிப்பட்ட மிரட்டலுக்கு ஆட்பட்டு இருக்கின்றார்கள். தாமரைக்கனி அவர்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுவது உங்களுடைய அதிகாரத்தின் மூலமாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் கூறிக்கொள்கின்றேன்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பாக சட்டமன்றத்திலே நடந்த நிகழ்ச்சியின் காரணமாக அவரை ஒரு வார காலம் நீங்கள் தற்காலிக நீக்கம் செய்து இருக்கின்றீர்கள். சட்டமன்ற வளாகம் என்பதில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதியும் சேரும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலேகூட அவரைத் தங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே பணிவோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

அதேபோல, அவர் அப்படிப்பட்ட காரியங்களை யெல்லாம் செய்கின்றபோது நாங்கள் பொறுமையாக இருப்பதற்குக் காரணம் நாங்கள் சார்ந்து இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அதைப் பொறுப்பேற்று வழிநடத்திச் சென்று கொண்டிருக்கின்ற எங்களது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நற்பெயர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் ஒரு அமைதியான போக்கை நாங்கள் கடைப்பிடித்துக் கொண்டு இருக்கின்றோம். எங்களுக்கும் வீரம் இரத்தத்திலே ஊறிப் போன ஒன்று. ஆகவே, நாங்கள் எதிரிகளைப் பார்த்து அமைதியாக இருப்பது, நாங்கள் ஏதோ அவர்களைக் கண்டு

கோழைத்தனமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. எங்களுடைய தலைமைக்காகவும் அதனுடைய இயக்கத்திற்காகவும்தான் நாங்கள் பணிந்து செல்கின்றோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அந்த உறுப்பினருக்கு அதிகபட்சம் தண்டனை வழங்குமாறு தங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பிள்ளை இல்லாத கிழவன் துள்ளி விளையாடுவது போல, இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைத் தொடர்ச்சியாகப் பதம் பார்த்துக் கொண்டு இருக்கிறார். இவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, கிட்டத்தட்ட 8, 9 நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்று ஆகிவிட்டது. இந்த உறுப்பினர் குண்டர் சட்டத்தின் கீழும் கைது செய்யப்பட்டு இருக்கிறார். (குறுக்கீடுகள்) மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் .... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இங்கே நடந்த சம்பவங்களைச் சொல்லுங்கள். அதெல்லாம் வெளியிலே நடந்த சம்பவம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் சேர்த்துச்சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் ஈஸ்வரன் அவர்கள் தாக்கப்பட்ட சம்பவம்பற்றிக் கிளப்பவேண்டும் என்று சொன்னீர்கள். அதற்கு உங்களுக்கு அனுமதி அளிக்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : உங்கள் உணர்வுகளை எல்லோரும் உணர வேண்டும் அல்லவா ? அதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளே (That is all) வந்தாலும் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை ; சட்டமன்றத்திற்கு வெளியே சென்றாலும் எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது, இந்த ஒரு சட்டமன்ற உறுப்பினராலே என்று சொன்னால் .... (குறுக்கீடுகள்) என்னய்யா....? (குறுக்கீடுகள்)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ், 'என்னய்யா....?' என்பதெல்லாம் முறைகேடான வாசகம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை

இல்லை. நீங்கள் தெரிவிக்க வேண்டிய கருத்தைத் தெரிவித்து விட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இங்கே நான் அவையைக் கண்ணியமாக நடத்திச் செல்ல வேண்டும். உங்களைப் போன்று கண்ணியக் குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவதற் கெல்லாம் அனுமதிக்க முடியாது.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : தாமரைக்கனி போல நடந்து கொள்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி போலவே நீங்களும் நடந்து கொள்ளக் கூடாது; உட்காரவும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : தாமரைக்கனி போல இருந்தால் தான் எங்களுடைய உயிரைக் காப்பற்ற முடியும் ; எங்களுடைய உரிமையைக் காப்பாற்ற முடியும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமாரதாஸ் உட்காருங்கள். அவை முன்னவர் அவர்கள் இதுபற்றி ஒரு கருத்தைச் சொல்வார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

டாக்டர் தே. குமாரதாஸ் : பேச்சுரிமையைப் பறிப்பதால் வெளிநடப்பு செய்கிறேன் (குறுக்கீடுகள்).

(டாக்டர் தே. குமாரதாஸ் வெளிநடப்புச் செய்தார்.)

முற்பகல் 11—20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோல் திரு. குமாரதாஸ் சொல்வது முறையல்ல. இங்கே, மற்ற உறுப்பினர்கள் எல்லாம் அவர்களுடைய கருத்தை ஆணித்தரமாகச் சொன்னார்கள். அதே நேரத்திலே, சொல்ல வேண்டிய அளவுக்கு தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, குமாரதாஸ் இங்கே திட்டமிட்டு ஏதாவது குழப்பம் செய்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று வந்தார். இந்தப் பிரச்சினையை அவையே ஒருமுகமாக ஏற்றுக் கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டவுடன், என்ன செய்வது என்று கருதி தவறான வார்த்தைகளை இங்கே பயன்படுத்திவிட்டுச் செல்கிறார் என்றுதான் பொருளே தவிர, வேறு, ஒன்றும் இல்லை. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் எனக்கே கூட அன்றைக்கு இந்தச் சம்பவம் நடந்த உடனேயேகூட இந்தப் பேரவைக் கூட்டத் தொடர் முழுவதும் அவர் நீக்கப்பட வேண்டும் என்றுதான் நான் கருத்துக் கொண்டு இருந்தேன். ஆனாலும் இங்கே அவை முன்னவர் அவர்கள் ஒரு வாரம் என்று தீர்மானம் கொண்டு வந்து அது நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகு, அதில் அவை ஒரு முடிவு எடுத்ததற்கு பிறகு, நான் அதை மீறி ஒரு முடிவு எடுப்பது என்பதற்கு விதிகளின்படி

1993 மார்ச் 31] [பேரவைத் தலைவர்]

இடம் இல்லாத காரணத்தால் அன்றைக்கு எந்த முடிவும் எடுக்கவில்லை. மற்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் விதி 120-ன் கீழ் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த உறுப்பினரைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ அவைக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்பட்டது என்பது, மூன்று முறை, நான்கு முறை அவைக் கூட்டத் தொடர் முழுவதும் அவைக்கு வரக்கூடாது என்று ஏற்கனவே உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, அவை கூட்டத் தொடர் முழுவதும் நீக்கப்பட வேண்டும் என்பதில் அவைத் தலைவனரப்பொறுத்தமட்டில்துளியும், எந்தஅளவிலும் மாறுபட்ட கருத்து கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூட அடிக்கடி தெரிவிக்கிறபோது தாமரைக்கனி அவர்களாலே அவையினுடைய நடவடிக்கைகளுக்கு பல்வேறு வகைகளிலேயும் குந்தகம் ஏற்பட்டு வருகிறது, இதற்கு எப்படியாவது ஒரு தீர்வு காண வேண்டுமென்பதைத்தான் அடிக்கடி அவருடைய கருத்தாகவும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் விதிமுறைகளின்படி ஒரு உறுப்பினரை இரண்டாவது முறையும் பேரவையிலிருந்து ஒரு கூட்டத்தொடரில் வெளியேற்றுகிறபோதுதான் கூட்டத்தொடர் முழுவதும் அவரை நீக்கிவைக்கிற அளவுக்கு பேரவைத் தலைவருக்கு விதி 120-ன்கீழ் அந்த உரிமை இருக்கிறது. ஆனால், இரண்டுமுறை நீக்கப்பட்டிருக்கிற திரு. தாமரைக்கனி இந்த முறையைப் பொறுத்தமட்டில் அன்றைக்குத்தான் இந்தக் கூட்டத் தொடரில் முதல்முறையாக வெளியேற்றப்பட்ட காரணத்தால் அந்த விதியை அன்றைக்குப் பயன்படுத்த முடியவில்லை. இருந்தாலும் ஏற்கனவே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பேரவையே அந்தத் தீர்மானத்திற்கு ஏதாவது மாற்றாக ஒரு முடிவு செய்து, தீர்மானம் கொண்டு வந்து, நிறைவேற்றுவீர்களானால் முழு மனதோடு அதை ஏற்றுக் கொள்கிற முதல் ஆளாக நான்தான் இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இந்த அவையில் நடந்து கொள்கிற போதும் சரி, அவையைச் சார்ந்த வளாகமாக விளங்குகிற விடுதியில் நடந்துகொள்கிற போதும் சரி, எப்படி ஒழுங்கீனமாகவும், ஜனநாயகத்திற்கு புறம்பாகவும், சட்ட விதிமுறைகளுக்கு மாறுபாடாகவும், நடந்து கொண்டு வந்திருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அடிக்கடி இப்படி விதிகளுக்கு புறம்பான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டு இருந்தார் என்பது மட்டுமல்லாமல், இந்த அவையினுடைய நடவடிக்கையைக் கூட பல தடவைகள் அவர் தடுத்து நிறுத்துகிற அளவுக்கு, தாங்கள் பல தடவைகள் அவருக்கு ஆணையிட்டும் கூட, அதை மீறி மீறி நடக்கிற ஒரு பண்பைத்தான் அவர் தொடர்ந்து கொண்டு வந்திருக்கிறார் என்பதையும் நாம் உணர்வோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே உணர்வில் இருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருப்பவர்கள் எடுத்து தெரிவித்த

கருத்துக்கள் மட்டுமல்லாமல், ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதே கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் உணர்கிறோம். அந்த வகையிலேதான் அவர் அன்று நடந்துகொண்ட முறை ஜனநாயகத்திற்கு புறம்பானது என்பது மட்டுமல்லாமல், மனிதத் தன்மைக்கும் ஏற்றதல்ல என்பது மட்டுமல்லாமல், இந்த அவையினுடைய விதிமுறைகளுக்கு முற்றிலும் புறம்பானது என்ற காரணத்தாலேதான் அவர் வெளியேற்றப்பட வேண்டுமென்று தாங்கள் உடனடியாக உத்தர விட்டீர்கள். ஆனால் ஒரு நாள் வெளியேற்றப்பட்டால் போதாது என்கிற உணர்வோடுதான் ஒரு வாரகாலம் அவரை அவைக்கு வராத அளவுக்கு வெளியேற்றி வைக்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை கொண்டு வர வேண்டிய அவசியம் வந்தது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட அதற்கு பிறகு எடுத்து தெரிவிக்கிறபோது, அவரை இந்தத் தொடர் கூட்டம் முழுவதுமே நீக்கி வைத்திருக்கலாமே என்ற ஒரு கருத்தைத் தான் அவர்கள் சொன்னார்கள். முதலில் தாமரைக்கனி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு கட்டம் வந்ததற்கு பிறகு, ஒரு வார காலம் அவரை நீக்கி வைக்கலாம் என்று தீர்மானம் வந்ததற்கு பிறகுதான், மற்ற இருவரை இரண்டு முறை அவர்கள் வெளியேற்றப்பட்டதன் காரணமாக, அவர்கள் இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நீக்கி வைக்கப்படலாம் என்ற ஒரு தீர்ப்பைத் தாங்கள் அதற்கு பிறகு கொண்டு வந்தீர்கள்.

ஆனால், இப்போது நடைபெற்று இருக்கிற இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கூர்ந்து கவனிக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களோடு ஒன்றியிருந்து, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களை இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நீக்கி வைக்கிற அத்தகைய தீர்மானத்தை நான் திருத்தத்தோடு கொண்டு வரவேண்டும்—கொண்டு வரலாம் என்று கருதுகிறேன். அதோடு மட்டுமல்லாமல் இங்கே மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள் பேசுகிறபோது—ஒரு உறுப்பினர் தவறு செய்திருக்கிறார், தவறு செய்தார் என்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வெளியே தவறு செய்ததன் காரணமாக காவல் துறையினராலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றத்தில் புறம்பாக நடந்து கொண்டதன் காரணமாக இங்கேயும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உணர்வு இருந்துவருகிறது. ஒரு தாமரைக்கனி தவறாக நடந்து கொண்டால், தமிழகமே தவறாக நடந்து கொண்டதாக ஆகாது.

முற்பகல் 11-25

தாமரைக்கனி தமிழகமும் அல்ல, தமிழகம் தாமரைக்கனியும் அல்ல. ஆகவே, எங்காவது ஒரு திருட்டு நடந்து விட்டால், தமிழகமே திருடிற்று என்றோ, எங்காவது ஒரு கொலை நடந்தால், தமிழகமே கொலை நடத்தியது என்றோ, யாராவது ஒருவர் உளறினால், தமிழகமே உளறுகிறது என்றோ, அதற்குப் பொருள்

கொள்ள முடியாது. ஆகவே, அந்த வகையிலே அவருடைய தவறை எல்லோரும் உணர்கிறார்கள். எல்லோரும் அவர் தண்டிக்கப்படவேண்டும் என்று கருதுகிறார்கள். அந்த வகையிலே இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் அவரை நீக்கி வைக்கலாம் என்ற தீர்மானத்தைக் கொண்டு வரலாம் என்பது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய மற்றொரு கருத்தையும்—இனிமேல் அவரை விடுதியிலே தங்கவைக்க வேண்டாம் என்கிற அந்தக் கருத்தையும்—மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே மேற்கொள்ளலாம். அதை எடுப்பார்களேயானால், இனிமேல் அவரை விடுதியிலே குடியிருக்க விடவேண்டாம், இல்லாவிட்டால், அடிக்கடி இந்தத் தகராறு வந்து கொண்டே இருக்கும் என்ற காரணத்தினால், அந்தக் கருத்தையும் தாங்கள் ஏற்றுக் கொள்ள லாம். அந்த வகையிலே நாம் தீர்மானத்தைக் கொண்டு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் நீக்கி வைக்கலாம் என்கிற தீர்மானத்தை முன்மொழிய லாம். ஏற்கனவே தீர்மானம் முன்மொழியப்பட்டு இருக்கிற காரணத்தால், இன்னொரு தீர்மானம்தான் இதற்குக் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"29—3—1993 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களைப் பேரவைப் பணிகளிலிருந்து ஒரு வார காலத்திற்கு தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டு இருப்பினும், அவருடைய நடவடிக்கைகள் கண்டிக்கத்தக்கவையாகவும், கடுமையானதாக வும் இருப்பதால், திரு. தாமரைக்கனி அவர்கள் பேரவைப் பணிகளிலிருந்து இக்கூட்டத் தொடர் முடியும் வரை தற்காலிக மாக நீக்கம் செய்யப்பட வேண்டும்."

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

திரு. தாமரைக்கனி அவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முழுவதற்கும் பேரவை நிகழ்ச்சிப் பணிகளில் ஈடுபடாத அளவிற்கு தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு பேரவை விடுதியிலிருந்தும், அவருக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற அறையை காலி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டு பேரவை விடுதியிலிருந்தும் அவரை வெளியேற்ற உத்தரவிடு கிறேன். (குறுக்கீடுகள்).